என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் உள்ள போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில், படிப்படியாக புறவழிச் சாலைகள் அமைக்கப்படுமென்று அறிவித்திருக்கின்றார்கள். நிதிநிலைக்கேற்ப, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்குப் புறவழிச் சாலை அமைக்கின்ற பணி மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டுகூட 5, 6 புறவழிச் சாலைகள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். என்னுடைய துறை மானியக் கோரிக்கையிலே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, அங்கே புதிய புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றேன். ஆகவே, ஒவ்வோர் ஆண்டும் நிதிநிலைமைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 258, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

258—

சொந்தக் கட்டடம்

***35964—திருமதி ர. சுபா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், கோவிந்தம்பாளையம் ஊராட்சியில், கோவிந்தம்பாளையம்-1, கோவிந்தம்பாளையம்-2 மற்றும் பள்ளியார்பாளையம் என மூன்று

2014 ஜூலை 25]

அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் கோவிந்தம்பாளையம்-1 மையம் அரசுக் கட்டடத்திலும், கோவிந்தம்பாளையம்-2 மற்றும் பள்ளியார்பாளையம் மையங்கள் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு மையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி தொகுதி, தலைவாசல் ஒன்றியம், கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் 3 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கன்வாடி மையங்களுக்கு 2014-2015 ஆம் நிதியாண்டிலேயே சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்படவிருக்கும் மொத்த அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை 126. இதிலே கெங்கவல்லி தொகுதியில் அடங்கியிருக்கிற கெங்கவல்லி வட்டாரத்தில் 4 மையங்களும், தலைவாசல் வட்டாரத்தில் 4 மையங்களும் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதிலே தலைவாசல் வட்டாரத்தில் கட்டப்படவிருக்கும் மையங்களில், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற கோவிந்தம்பாளையம் அங்கன்வாடி மையமும் ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட புல்லங்குறிச்சி ஊராட்சி மற்றும் சதாசிவபுரம் ஊராட்சி ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுகளாகும். இங்கு 2 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன. இந்த அங்கன்வாடி மையங்கள் செயல்படும் கட்டடங்கள் மிகவும் பழமையான கட்டடங்களாக இருப்பதனால், அந்த 2 ஊராட்சிகளின் அங்கன்வாடி மையங்களுக்கு அதிநவீன கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டடம் கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

259—

நேரடிக் கொள்முதல் நிலையம்

***13099—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?